**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை**
**I.A.No.07/2025 in O.S.No.127/2023**

மூன்று மந்தை 84 சோளியவெள்ளாளர் சமூக
மக்கள் திருமலைபாளையம்,
காணியாளம்பட்டி மற்றும் சங்கரகோட்டை
க.எண்.4/96 சார்பாக அதன் பெரியதனக்காரர்கள்
M.ராஜலிங்கம் மற்றும் சிவலிங்கம்

... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. R. செந்தில்வேல்ராஜன்
2. P. கார்த்திகேயன்
3. R. துரைராஜன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 09.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உ த்தரவு**

கூடுதல் பதில் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் 1ம் வாதி. 2ம் வாதிக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கானது 10.11.2025 அன்று விசாரணைக்காக போடப்பட்டிருந்தது. விசாரணைக்காக மனுதாரர்கள் தரப்பில் தயார் செய்த போது தான் பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் மற்றொரு வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் மேற்படி வழக்கின் எண்ணை குறிப்பிடாமல் கூறியிருந்தனர். மேற்படி சங்கதி குறித்தும், பிரதிவாதிகளின் பதிலுரையில் கண்டுள்ள குறைபாடுகள் குறித்தும் மனுதாரர்கள்

தரப்பில் கூடுதல் பதில் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும் எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதில் வழக்குரையை ஏற்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

2) மனு பத்தி 2 மற்றும் 3 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானதாகும். இவ்வழக்கு விசாரணைக்காக தயார் செய்த போது தான் பிரதிவாதிகள் பதிலுரையில் கூறியுள்ள விபரம் தெரியும் என கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கும், இந்த வாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. வேண்டுமென்றே பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தங்கள் கூடுதல் பதில் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள சங்கதிகள் இப்பிரதிவாதிகளை வஞ்சிக்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும் பிரதிவாதிகளுக்கு நிலையான மன நிலை இல்லை என்றும், இவ்வழக்கில் அவர்களுக்கு எதிர் வாதம் இல்லை என கூறியுள்ள வார்த்தைகள் கண்டிக்கத்தக்கதாகும். வாதிகள் ஒரு நிலையான மன நிலையில் இல்லாமல் பொய்யான சங்கதிகளை கண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள தங்கள் தரப்பு கூடுதல் வழக்குரையை ஏற்க வேண்டுமென வாதிட்டனர். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதில் வழக்குரையை பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையை மறுத்து கூறும் வகையில் மேற்படி கூடுதல் பதில் வழக்குரை அமைந்துள்ளது. மேற்படி பிரதிவாதிகளின் சங்கதிகளை மறுப்பு தெரிவிப்பதை தவிர கூடுதல் பதில் வழக்குரையில் எந்த விதமான புதிய சங்கதிகளும் கூறப்படவில்லை.

5) கட்டளை 8 விதி 9ன் படி பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரை அல்லது எதிர் கோரிக்கை ஆகியவற்றிற்கு மட்டுமே வாதிகள் தங்கள்

தரப்பில் கூடுதல் பதில் வழக்குரையை தாக்கல் செய்ய இயலும். அவ்வாறு இல்லாமல் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையை மறுத்து கூறுவதற்கு மட்டுமே தாக்கல் செய்துள்ள இந்த கூடுதல் பதில் வழக்குரையை அனுமதிக்க போதிய காரணம் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் இம்மனுவை அனுமதிக்க காரணங்கள் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI    Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

-இல்லை-

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

-இல்லை-

R TAMILARASI    Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

***************************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 07/2025**
**in**
**O.S.No. 127/2023**

**DRAFT / FAIR ORDER**
**D.D.12.03.2026**

***************************************